(b) மூலகங்கள் P, Q, X, Y என்பன அணு எண் 20 இற்கு உட்பட்ட 4 மூலகங்களாகும். இவை அவற்றின் உண்மைக் குறியீடுகள் அல்ல. P, Q, X என்பன நடுநிலை ஒட்சைட்டுக்களை உருவாக்கக்கூடியவை. Y ஆனது P உடன் தாக்கமடைந்து உருவாக்கும் சேர்வையில் மாத்திரமே Y நேர் ஒட்சியேற்ற நிலையைப் பெறுகிறது. X இன் அதியுயர் ஒட்சியேற்ற நிலைக்குரிய ஒட்சைட்டு வன்னமில இயல்புடையது. Q உருவாக்கும் பங்கீட்டு வலுச்சேர்வைகள் எதனிலும் Q தனிச்சோடி இலத்திரனைக் கொண்டிருக்கவில்லை. இம்மூலகங்களினால் உருவாக்கப்பட்ட மூலக்கூறு $QX_2Y_2P$ இன் அடிப்படைக் கட்டமைப்பு கீழே தரப்பட்டுள்ளது.

```
     Q      Y
     |      |
P – X1 – X2 – Y
```

i. மூலகங்கள் P, Q, X, Y ஐ இனங்காண்க.

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

ii. இம்மூலக்கூறுக்கு மிகவும் ஏற்றுக்கொள்ளக்கூடிய லூயிசின் கட்டமைப்பை வரைக.

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

iii. மேற்கூறிய மூலக்கூறிற்குரிய பரிவுக் கட்டமைப்புகளை வரைந்து, கட்டமைப்புகளின் சார் உறுதி நிலைகளை காரணங்களுடன் குறிப்பிடுக.

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

iv. கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ள $X_1$, $X_2$ அணுக்களின்

1. அணுவைச் சூழவுள்ள இலத்திரன் சோடிக் கேத்திரகணிதம்.
2. அணுவைச் சூழவுள்ள வடிவம்.
3. அணுவின் கலப்பாக்கம்
4. அணுவைச் சூழவுள்ள பிணைப்புக்கோணத்தின் அண்ணளவான பெறுமானம் என்பவற்றைக் குறிப்பிடுக.

[பக். 3 ஐப் பார்க்க

இந்நிரலில் எதனையும் எழுதுதல் ஆகாது.

| | $X_1$ | $X_2$ |
|---|---|---|
| இலத்திரன் சோடிக்கேத்திரகணிதம் | | |
| வடிவம் | | |
| கலப்பாக்கம் | | |
| பிணைப்புக்கோணம் | | |

v. $X_1$, $X_2$ ஆகியவற்றின் மின்னெதிர்த்தன்மையை காரணத்துடன் ஒப்பிடுக.

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

(c) i. கீழே அடைப்பினுள் தரப்பட்டுள்ள சாலகவகை சொற்பதங்களை பயன்படுத்தி தரப்பட்டுள்ள பதார்த்தங்களில் உள்ள சாலக வகையினை குறிப்பிடுக.
(அயன்சாலகம், முனைவில் மூலக்கூற்று சாலகம், உலோகசாலகம், ஓரின அணுச்சாலகம், முனைவு மூலக்கூற்று சாலகம், பல்லின அணுச்சாலகம்)

1. $CsCl_{(s)}$ ……………………………………………………………………………

2. சிலிக்கன் $[Si_{(s)}]$……………………………………………………………………

3. உலர்பனிக்கட்டி ………………………………………………………………………

4. Cu ……………………………………………………………………………………

5. சாய்சதுர கந்தகம் ……………………………………………………………………

ii. கீழே தரப்பட்டள்ள காபன்சேர்வைகளை கருதுக.
போமல்டிகைட்டு ($H_2CO$), போமிக்கமிலம் ($H_2CO_2$), ஒட்சாலிக்கமிலம் ($H_2C_2O_4$)

1. இவற்றினை கொதிநிலை, அமில இயல்பின் ஏறுவரிசை ஒழுங்கில் தருக.

கொதிநிலை ……………..<…………………..<………………

அமில இயல்பு …………..…<…………………..<………………

2. இச்சேர்வைகளில் காணப்படும் மூலக்கூற்றிடை கவர்ச்சிவிசை வகைகள் யாவற்றையும் குறிப்பிடுக.

போமல்டிகைட்டு ……………………………………………………………………

போமிக்கமிலம் ……………………………………………………………………

ஒட்சாலிக்கமிலம் ……………………………………………………………………

02. (a) X எனும் s தொகுப்பு மூலகம் ஒன்றை தனித்தனியே NaOH நீர்க்கரைசல், HCl நீர்க்கரைசல் என்பவற்றினுள் இடும்போது Y எனும் வாயு வெளியேறியது. X உம் Y உம் சற்று உயர் வெப்பநிலையில் தாக்கமடைந்து Z எனும் காரத்தன்மை உடைய வெண்சேர்வையை விளைவாக்கியது. சேர்வை Z ஆனது நீருடன் தாக்கமடைந்து வாயு Y ஐ உருவாக்கியது. X இன் குரோமேற் உப்பு அசற்றிக்கமிலத்தில் கரைவதில்லை. ஐதான $HNO_3$ இல் கரைந்து கரைசல் W ஐ விளைவிக்ககூடியது.

i. மூலகம் X ஐ இனங்காண்க.

……………………………………………………………………………………………………

ii. W, Y, Z என்பவற்றின் இரசாயன சூத்திரங்களை தருக.

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

iii. சேர்வை Z ஆனது நீருடன் காட்டும் தாக்கத்திற்கு சமப்படுத்திய இரசாயன சமன்பாட்டை தருக.

……………………………………………………………………………………………………

[பக். 4 ஐப் பார்க்க

இந்நிரலில் எதனையும் எழுதுதல் ஆகாது.

iv. X இன் குரோமேற் உப்பிற்கு ஐதான $HNO_3$ சேர்க்கும் போது நடைபெற்ற தாக்கத்திற்கான சமப்படுத்திய இரசாயன சமன்பாட்டையும் அவதானத்தையும் குறிப்பிடுக.

…………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………

v. X ஐ NaOH நீர்க்கரைசல், HCl நீர்க்கரைசல் இல் தனித்தனியே இடும் போது அக்கரைசல்களின் pH இல் ஏற்படும் மாற்றங்களை எதிர்வு கூறுக.

$NaOH_{(aq)}$ …………………………………………………………………………………………..

$HCl_{(aq)}$ …………………………………………………………………………………………….

vi. மூலகம் X இன் சல்பேற்று உப்பு மருத்துவ பயன்பாட்டில் முக்கியத்துவமானது. அதன் பயன்பாட்டை குறிப்பிடுக.

…………………………………………………………………………………………………………

(b) A தொடக்கம் E வரை பெயரிடப்பட்ட சோதனை குழாய்களில் பின்வரும் சேர்வைகள் அடங்கியுள்ளன. இச்சேர்வைகள் ஒழுங்குமுறையில் தரப்படவில்லை.

$H_2SO_4$, $AgNO_3$, $CuSO_4$, $Al_2S_3$, $Ba(NO_2)_2$

மேற்குறிப்பிட்ட சேர்வைகளை இனங்காண செய்யப்பட்ட சோதனைகள், அவதானங்கள் கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

| சேர்வை | சோதனையும் அவதானமும் |
|---|---|
| A | $KI_{(aq)}$ சேர்க்கும் போது வெண்ணிற வீழ்படிவு பெறப்பட்டது |
| B | $Na_2S_2O_{3(aq)}$ உடன் வெண்ணிற வீழ்படிவு உருவாகிறது. சிறிது நேரத்தில் கறுப்பு நிறமாக மாறியது. |
| C | $PCl_5$ உடன் வெண்புகையை உருவாக்கியது |
| D | ஐதான HCl உடன் கபிலவாயுவை வெளியேற்றுகிறது. |
| E | நீர் சேர்க்க ஜெலாற்றின் போன்ற வெண்வீழ்படிவையும் துர்நாற்ற மணமுள்ள வாயுவும் தோன்றும். |

i. A தொடக்கம் E வரையான சேர்வைகளை இனம் காண்க.

A……………..…….. B…………………… C……………………..
D……………..…….. E……………………

ii. A தொடக்கம் E வரையான ஒவ்வொரு சேர்வைகளினதும் சோதனைகளிற்கான தாக்கத்தின் சமன்செய்த சமன்பாடுகளை தருக. வீழ்படிவுகள் உருவாக்கப்படின் ↓ எனும் குறியீட்டை பாவிக்கவும்.

A ……………………………………………………………………………………………….
……………………………………………………………………………………………….

B ……………………………………………………………………………………………….
……………………………………………………………………………………………….

C ……………………………………………………………………………………………….
……………………………………………………………………………………………….

D ……………………………………………………………………………………………….
……………………………………………………………………………………………….

E ……………………………………………………………………………………………….
……………………………………………………………………………………………….

[பக். 5 ஐப் பார்க்க

இந்நிரலில் எதனையும் எழுதுதல் ஆகாது.

03. (a) நியம கலமல் மின்வாயையும் நியம குளோரின் மின்வாயையும் கொண்டுருவாக்கப்பட்ட மின் இரசாயனக் கலமொன்றின் அமைப்பு கீழே தரப்பட்டுள்ளது. (அம்புக்குறி காட்டும் திசையில் இலத்திரன் பாய்ச்சல் நடைபெறுகின்றது.)




கலத்தின் அடிப்படையில் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

i. A - E ஐ இனங்காண்க. பொருத்தமான இடங்களில் பௌதீகநிலை, செறிவு, அமுக்கம் என்பவற்றைத் தருக.

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

ii. இரு அரைக்கலங்களையும் இணைப்பதற்கு முன்னர் மின்வாய்களில் நிலவிய மின்வாய் சமநிலைகளைத் தருக.

1. கலமல் மின்வாய் ……………………………………………………………………………..

2. குளோரின் மின்வாய் …………………………………………………………………………

iii. கலத்தாக்கத்தைத் தருக.

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

iv. கலத்தின் நியமக் கலக்குறியீட்டைத்தருக.

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

v. கலத்தாக்கத்திற்குரிய கிப்ஸின் சக்திமாற்றம் $\Delta G^{\theta}$ ஆனது பின்வரும் சமன்பாடு மூலம் தரப்படலாம்.

$$\Delta G^{\theta} = -nFE^{\theta}$$

இங்கு n என்பது ஈடுசெய்த கலத்தாக்கத்தில் சம்பந்தப்படும் இலத்திரன்களின் மூல் எண்ணிக்கையாகும். (ஒட்சியேற்றி, தாழ்த்திகளிடையே பரிமாற்றப்பட்ட இலத்திரன்களின் மூல் எண்ணிக்கை)

F– பரடே மாறிலி ($F = 96500\ Cmol^{-1}$)

$E^{\theta}$ கலத்தின் மின்னியக்க விசையாகும்.

இக்கலத்தாக்கத்துடன் சம்பந்தப்பட்ட சுயாதீன சக்திமாற்றம் $-212.3 kJmol^{-1}$ எனின் கலத்தின் நியம மின்னியக்கவிசையைக் கணிக்க.

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

[பக். 6 ஐப் பார்க்க

இந்நிரலில் எதனையும் எழுதுதல் ஆகாது.

vi. நியம குளோரின் மின்வாயின் மின்னியக்க விசை $E^{\theta}_{Cl_{2(g)}/Cl^{-}_{(aq)}} = +1.36V$ எனின் நியம கலமல் மின்வாயின் மின்னியக்க விசையைக் கணிக்க.

…………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………

(b) நீரின் அவத்தை வரைபடம் கீழே தரப்பட்டுள்ளது.




i. நீரின் அவதிவெப்பநிலை என்பதனால் யாது விளங்குகிறீர்.

…………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………

ii. நீரின் திண்மநிலை, திரவநிலை, ஆவிநிலைகளுக்குரிய பிரதேசங்களை முறையே X, Y, Z என மேலே தரப்பட்ட அவத்தை வரைபடத்தில் குறித்துக்காட்டுக.

iii. நீரின் மூன்று பௌதீக நிலைகளும் ஒருங்கே சமநிலையில் காணப்படுவதற்கான வெப்பநிலை, அமுக்கம் என்பவற்றைக் குறிப்பிடுக.

வெப்பநிலை ……………………………………………………………………………………..

அமுக்கம் ……………………………………………………………………………………..

iv. மேலே நீர் குறிப்பிட்ட அமுக்கத்தை விட குறைந்த அமுக்கப்பெறுமதியில் பனிக்கட்டியின் வெப்பநிலை உயர்த்தப்படுமெனின் அதன் பௌதீகநிலையில் ஏற்படும் மாற்றத்தைக் குறிப்பிடுக.

…………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………..

v. கோடுகள் BC, BA என்பன 1 atm அமுக்க நிலையை இடைவெட்டும் சந்தர்ப்பத்தின் போதான வெப்பநிலைகளை முறையே குறிப்பிடுக.

BC ………………………………………………………………………………………………

BA………………………………………………………………………………………………

[பக். 7 ஐப் பார்க்க

இந்நிரலில் எதனையும் எழுதுதல் ஆகாது.

04. (a) A, B, C, D, E என்பன $C_{10}H_{14}O$ எனும் மூலக்கூற்று சூத்திரத்திற்கமைவான ஐந்து, பென்சீனின் ஒரு பிரதியீட்டு சேர்வைகளாகும். D, E என்பன நீரற்ற $ZnCl_2$, செறிந்த HCl உடன் உடனடி கலங்கலை தரும் அதேவேளை A, B, C என்பன மிக மந்தமாக கலங்கலை தருகின்றது. B, D என்பன மாத்திரம் திண்ம சமபகுதிய தோற்றப்பாட்டினை வெளிக்காட்டுகின்றன. B ஐ நீரகற்றிவரும் விளைவிற்கு $Br_2/CCl_4$ ஐ சேர்த்து பின் எதனோல்/KOH ஐ பயன்படுத்தி ஐதரோ அலசன் அகற்றலுக்கு உட்படுத்தும் போது பெறப்படும் விளைவு F ஆனது $NH_3$ / $AgNO_3$ உடன் வெண்வீழ்படிவை கொடுத்தது. A, C என்பன PCC / $CH_2Cl_2$ உடன் ஒட்சியேற்றப்படுகையில் முறையே G, H ஐ விளைவுகளாக தருகின்றன. G ஆனது கார ஊடகத்தில் தன் ஒடுங்கலிற்கு உட்படும் எனினும் H அவ்வாறு தன் ஒடுங்கல் அடைவதில்லை.

i. A, B, C, D, E, F, G, H ஆகிய சேர்வைகளின் கட்டமைப்புகளை கீழே உள்ள பெட்டிகளில் வரைக.

A B C

D E F

G H

ii. G ஆனது ஐதான NaOH ஊடகத்தில் தன் ஒடுங்கல் அடைந்து உருவாகும் விளைவின் கட்டமைப்பை வரைக.

........................................................................................................................................
........................................................................................................................................
........................................................................................................................................

iii. $$F \xrightarrow{HgSO_4/dil.H_2SO_4} \text{விளைவு } P \xrightarrow{2,4\text{-DNPH}} \text{விளைவு } Q$$

F உடன் மேற்கொள்ளப்பட்ட தாக்கத்தொடரில் உருவாகும் விளைவு Q இன் கட்டமைப்பை கீழே வரைக.

........................................................................................................................................
........................................................................................................................................
........................................................................................................................................
........................................................................................................................................

[பக். 8 ஐப் பார்க்க

இந்நிரலில் எதனையும் எழுதுதல் ஆகாது.

iv. E இல் நீரகற்றலை மேற்கொண்டு உருவாகும் விளைவு,

a. கேத்திரகணித சமபகுதிய தன்மையை வெளிக்காட்டுகின்றதா?

…………………………………………………………………………………………………………

b. உமது விடைக்கான காரணத்தை தருக?

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

(b) i. 1 தொடக்கம் 5 வரையான தாக்கங்கள் ஒவ்வொன்றிலும் உள்ள தாக்கியும் சோதனைப்பொருளும் கீழே உள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு தாக்கத்திற்குரிய வகைகளையும் [கருநாட்டகூட்டல் ($A_N$), மின்நாட்டகூட்டல் ($A_E$), கருநாட்ட பிரதியீடு ($S_N$), மின்நாட்ட பிரதியீடு ($S_E$), நீக்கல் (E)] மற்றும் பிரதான விளைபொருளையும் உரிய பெட்டிகளில் எழுதுக.

| | தாக்கி | சோதனைப்பொருள் | தாக்க வகை | பிரதான விளைபொருள் |
|---|---|---|---|---|
| 1 |  | $H-C\equiv C^- Na^+$ | | |
| 2 | $CH_3-\overset{O}{\overset{\Vert}{C}}-CH_3$ | HCN / KCN | | |
| 3 | $(CH_3)_2CHCHBrCH_3$ | $C_2H_5OH$ / KOH | | |
| 4 |  | $CH_3COCl$ | | |
| 5 |  | $FeCl_3$ / $Cl_2$ | | |
| 6 |  | $Br_2$ / $CCl_4$ | | |

ii. வினா b(i) இல் தாக்கம் (6) இற்கான பொறிமுறையை கீழே எழுதுக.

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

முழுப் பதிப்புரிமையுடையது/ All Rights Reserved ]

MORA E-TAMILS 2018 | Tamil Students, Faculty of Engineering, University of Moratuwa

**மொறட்டுவை பல்கலைக்கழக பொறியியற் பீட தமிழ் மாணவர்கள் நடாத்தும் க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான 7வது முன்னோடிப் பரீட்சை - 2016**

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர் தர) முன்னோடிப் பரீட்சை - 2016
## General Certificate of Education (Adv.Level) Pilot Examination - 2016

இரசாயனவியல் II
Chemistry II

**02 T II**

*அகில வாயு மாறிலி* $R = 8.314\ J\ K^{-1}\ mol^{-1}$

*அவகாதரோ மாறிலி* $L = 6.022 \times 10^{23} mol^{-1}$

### பகுதி - B கட்டுரை

05. (a) மெதேன் வாயுவை நீராவியுடன் கலந்து தாக்கமடையச் செய்வதன் மூலம் ஐதரசன் வாயுவை அதிகளவில் உற்பத்தி செய்யமுடியும்.

சில பதார்த்தங்களின் நியமத் தோன்றல் வெப்பவுள்ளுறை மாற்றப்பெறுமதிகள், நியம எந்திரோப்பிப் பெறுமதிகள் என்பன கீழே தரப்பட்டுள்ளன.

$$CH_{4(g)} + H_2O_{(g)} \rightarrow CO_{(g)} + 3H_{2(g)}$$

| பதார்த்தங்கள் | $\Delta H^\theta_f$/kJmol$^{-1}$ | $S^\theta$/JK$^{-1}$mol$^{-1}$ |
|---|---|---|
| $CH_{4(g)}$ | -75 | 186 |
| $H_2O_{(g)}$ | - 242 | 189 |
| $CO_{(g)}$ | -111 | 198 |
| $H_{2(g)}$ | 0 | 131 |
| $CO_{2(g)}$ | -394 | 214 |

i. தரப்பட்ட தரவுகளைப் பயன்படுத்தி மெதேனிற்கும் நீராவிக்குமிடையே தாக்கத்தின் வெப்பவுள்ளுறை மாற்றம் $\Delta H^\theta$ கணிக்குக.

ii. இத்தாக்கத்தில் ஏற்படும் எந்திரோப்பி மாற்றம் $\Delta S^\theta$ ஐ காண்க.

iii. மேலே நீர் கணித்த $\Delta H^\theta$, $\Delta S^\theta$ தரவுகளைப்பயன்படுத்தி இத்தாக்கம் நடைபெறச் சாத்தியமான ஆகக்குறைந்த வெப்பநிலையைக் கணிக்குக.

iv. நீர் கணித்த பெறுமானம், உண்மைப்பெறுமதியில் இருந்து வேறுபடுவதற்கான காரணம் யாதாக அமையலாம்?

(b) i. குறித்த திணிவுடைய $NH_4Cl$ திண்மம் $27^0C$ வெப்பநிலையில் $4.157dm^3$ கனவளவுடைய விறைத்த குடுவையில் பின்வருமாறு பிரிகையடைந்து சமநிலையடையவிடப்பட்டது.

$$NH_4Cl_{(s)} \rightleftharpoons NH_{3(g)} + HCl_{(g)}$$

தொகுதியின் அமுக்கம் $8 \times 10^4\ Nm^{-2}$ எனின்,

1. $27^0C$ வெப்பநிலையில் சமநிலைத்தொகுதியின் $K_p$ ஐ கணிக்க.
2. மேற்படி சமநிலையை ஏற்படுத்த தேவையான $NH_4Cl_{(s)}$ இன் ஆகக்குறைந்த திணிவை கணிக்க. ( N – 14, H – 1, Cl – 35.5)

ii. அதே கனவளவுடைய பிறிதொரு குடுவையில் அதே வெப்பநிலையில் $NH_4HS$ திண்மமானது பின்வருமாறு பிரிகையடைந்து சமநிலையடைய விடப்பட்டது.

$$NH_4HS_{(s)} \rightleftharpoons NH_{3(g)} + H_2S_{(g)}$$

தொகுதியின் அமுக்கம் $6 \times 10^4\ Nm^{-2}$ எனின்

1. $27^0C$ வெப்பநிலையில் சமநிலைத்தொகுதியின் $K_p$ ஐ கணிக்க.
2. மேற்படி சமநிலையை ஏற்படுத்த தேவையான $NH_4HS_{(s)}$ இன் ஆகக்குறைந்த திணிவை கணிக்க. ( N – 14, H – 1, S – 32)

பக். 10 ஐப் பார்க்க

iii. அதே குடுவையினுள் $NH_4Cl_{(s)}$, $NH_4HS_{(s)}$ திண்மங்களின் பகுதி (i),2 பகுதி (ii),2 ஆகியவற்றில் பெறப்பட்ட அதே திணிவுகள் எடுக்கப்பட்டு $27^0C$ வெப்பநிலையில் சமநிலையடையவிடப்பட்டன. சமநிலை தொகுதியிலுள்ள,

1. $NH_{3(g)}$ இன் பகுதி அமுக்கத்தை காண்க.
2. சேர்க்கப்பட்ட திண்மங்களில் சமநிலையின் போது பிரிகையடையாது காணப்படும் $NH_4HS_{(s)}$ இன் திணிவை கணிக்க.

06. (a) ஐதரசீன் ($N_2H_4$) ஆனது நீர்க்கரைசலில் பின்வருமாறு அயனாக்கமடையக்கூடியது.

$$N_2H_{4(aq)} + H_2O_{(l)} \rightleftharpoons N_2H_5^+{}_{(aq)} + OH^-{}_{(aq)}$$

($25^0C$ இல் $K_b(N_2H_4) = 9 \times 10^{-7}\ moldm^{-3}$)

i. $0.1 moldm^{-3}$ ஐதரசீன் கரைசலின் pH ஐ கணிக்க. (log 3 = 0.4771)

ii. நீர்க்கரைசலில் $N_2H_5^+{}_{(aq)}$ இன் சமநிலையைக் கருதுக.

$$N_2H_5^+{}_{(aq)} + H_2O_{(l)} \rightleftharpoons N_2H_{4(aq)} + H_3O^+{}_{(aq)}$$

pH = 4.4 ஆகவுள்ள $100cm^3$ ஐதரசீனியம் குளோரைட்டு ($N_2H_5Cl$) நீர்க்கரைசலிற்கு $AgNO_{3(aq)}$ இனை சேர்ப்பதன் மூலம் வீழ்படிவாதலை ஆரம்பிப்பதற்கு சேர்க்க வேண்டிய $AgNO_{3(aq)}$ இன் இழிவுத் திணிவை mg இல் கணிக்குக.

($10^{0.6} = 4$, $K_{sp}(AgCl) = 1 \times 10^{-10}\ mol^2dm^{-6}$, Ag=108, N=14, O=16)

(b) i. $100\ cm^3$ $NH_3$ நீர்க்கரைசலானது $50\ cm^3$ சேதன கரைப்பான் A உடன் சேர்த்து குலுக்கி $25^0C$ இல் சமநிலை அடையவிடப்பட்டது. நீர்ப்படையின் $25cm^3$ ஐ வேறாக்கி $1\ moldm^{-3}$ செறிவுடைய HCl கரைசலினால் வலுப்பார்த்த போது அதன் $6cm^3$ தேவைப்பட்டது. சேதனபடையின் $25cm^3$ ஐ வேறாக்கி $0.5moldm^{-3}$ HCl இனால் வலுப்பார்த்த போது அதன் $5cm^3$ தேவைப்பட்டது.

1. நீருக்கும் சேதனப்படை A இற்கும் இடையே $NH_3$ இன் பங்கீட்டு குணகம் $K_D$ இற்கான கோவையை தருக.
2. நீருக்கும் சேதனப்படை A இற்குமிடையே $NH_3$ இன் பங்கீட்டு குணகத்தை கணிக்க.
3. மேற்படி நியமிப்புகளிற்கு பொருத்தமான காட்டியை தருக. இக்காட்டியை பயன்படுத்தும் போது முடிவுப்புள்ளியில் கரைசலில் ஏற்படும் நிறமாற்றத்தை குறிப்பிடுக.

ii. $3\ moldm^{-3}$ $NH_3$ நீர்க்கரைசலின் $50cm^3$ ஆனது $0.2\ moldm^{-3}$ $CuSO_4$ இன் $50cm^3$ உடனும் சேதன கரைப்பான் A இன் $200cm^3$ உடனும் கலந்து குலுக்கி சமநிலையடைய விடப்பட்டது. சமநிலையில் சேதன படையின் $25cm^3$ ஐ வேறாக்கி $0.5\ moldm^{-3}$ HCl இனால் வலுப்பார்த்த போது அதன் $12.5\ cm^3$ தேவைப்பட்டது.

$K_c\ [Cu(NH_3)_4]^{2+} = 1 \times 10^{12}\ mol^{-4}dm^{12}$

1. நீர்ப்படையில் சுயாதீனமாக காணப்படும் $NH_3$ இன் (சிக்கலினுள் காணப்படுவது தவிர்ந்த) செறிவை காண்க.
2. $[Cu(NH_3)_4]^{2+}$ சிக்கலின் செறிவை கணிக்க.
3. நீர்ப்படையில் உள்ள சுயாதீன $Cu^{2+}$ இன் செறிவை கணிக்க.

07. (a) பட்டியலில் தரப்பட்டுள்ள சேதன சேர்வைகள், தாக்குபொருட்கள் என்பவற்றை மாத்திரம் பயன்படுத்தி சேர்வை A ஐ எங்கனம் தொகுக்கலாம் என்பதை செய்து காட்டுக.

PCC, Mg, $CH_3OCH_3$, $K_2Cr_2O_7$, dil.$H_2SO_4$, $PCl_3$, உலர் ஈதர், $CH_2Cl_2$, Fe, conc. $H_2SO_4$, $CH_3OH$, $CH_3CH_2OH$

$$CH_3CH_2-\overset{\overset{\displaystyle O}{\|}}{C}-O-\overset{\overset{\displaystyle CH_3}{|}}{\underset{\underset{\displaystyle CH_3}{|}}{C}}-CH_3$$

சேர்வை A

(b) சேர்வை P ஐ மாத்திரம் சேதன சேர்வையாக பயன்படுத்தி சேர்வை Q ஐ எங்கனம் தொகுப்பீர் எனக்காட்டுக.

$$\underset{\text{சேர்வை P}}{CH_3CH_2Cl} \longrightarrow \underset{\text{சேர்வை Q}}{CH_3-\overset{\overset{\displaystyle O}{\|}}{C}-NH-CH_2CH_2-NH-\overset{\overset{\displaystyle O}{\|}}{C}-CH_3}$$

(c) i. எதனோல், பீனோல் ஆகியவற்றின் அமில இயல்புகளை ஒப்பிடுக.

ii. (c) (i) இல் உமது விடைக்கான காரணத்தை தருக.

ii. எதனோல் $PCl_5$ உடன் தாக்கி எதையில் குளோரைட்டை தரும் எனினும் பீனோல் $PCl_5$ உடன் தாக்கமடைவதில்லை. விளக்குக.

## பகுதி - C கட்டுரை

08. (a) A, B என்பன நீரில் கரையத்தக்க 3d – தொகுப்பு தாண்டல் மூலக உப்புக்களாகும். A, B என்பவற்றை நீர் சேர்த்து ஐதாக்கி முறையே X, Y எனும் மென்சிவப்பு நிற கரைசல்கள் பெறப்பட்டன. A, B என்பவற்றை இனங்காண்பதற்கு மேற்கொள்ளப்பட்ட சில சோதனைகள் கீழே தரப்பட்டுள்ளன.

**கரைசல் X இற்கு,**

| | |
|---|---|
| 1. HCl, NaOH ஐ தனித்தனியே சேர்த்து வெப்பப்படுத்தல் | எவ்வித வாயு வெளியேற்றமும் அவதானிக்கப்படவில்லை |
| 2. Al தூள், NaOH சேர்த்து வெப்பப்படுத்தல் | வெளிவந்த வாயு நெசுலரின் சோதனைப்பொருளை கபிலமாக்கியது |
| 3. $NH_4OH$, $NH_4Cl$ சேர்த்து $H_2S$ வாயு செலுத்துதல் | கறுப்பு நிற வீழ்படிவு P தோன்றியது. |
| 4. வீழ்படிவு P ஐ conc.$HNO_3$ இல் கரைத்து பின் conc.HCl ஐ மிகையாக சேர்த்தல் | நீல நிறக்கரைசல் பெறப்பட்டது. |

**கரைசல் Y இற்கு,**

| | |
|---|---|
| 5. conc. $H_2SO_4$, $K_2Cr_2O_7$ சேர்த்தல் | செந்நிற வாயு Q தோன்றியது |
| 6. வாயு Q ஐ NaOH கரைசலினுள் செலுத்துதல் | மஞ்சள் நிற கரைசல் R பெறப்பட்டது. |
| 7. கரைசல் R இற்குள் $(CH_3COO)_2Ba$ / conc.$HNO_3$ சேர்க்கப்பட்டது. | மஞ்சள் நிற வீழ்படிவு தோன்றியது. |
| 8. $PbO_2$, conc.HCl சேர்த்தல் | ஊதாநிற கரைசல் (S) பெறப்பட்டது |

i. உப்புக்கள் A, B என்பவற்றை இனங்காண்க.

ii. P, Q என்பவற்றையும் R, S கரைசல்களின் நிறங்களிற்கு பொறுப்பான அயன்களையும் எழுதுக.

iii. சோதனை 2, 5, 8 இற்கான சமப்படுத்திய இரசாயன சமன்பாடுகளை எழுதுக.

பக். 12 ஐப் பார்க்க

(b) மூலகம் E ஆனது அறைவெப்பநிலையில் வாயு நிலையில் காணப்படும். இதன் இலத்திரன் நாட்டம் ஆனது ஏனைய மூலகங்களை விட உயர்வானது.

i. மூலகம் E ஐ இனங்காண்க.

ii. மூலகம் E இன் உறுதி ஒட்சியேற்ற நிலைகளை குறிப்பிடுக.

iii. b(ii) இல் நீர் குறிப்பிட்ட ஒட்சியேற்ற நிலைகளுக்குரிய E இன் ஒட்சைட்டுகள் ஒவ்வொன்றினை தருக.

iv. E இன் ஒட்சைட்டுகளாகிய $EO_2$, $EO_3$ கொண்ட கலவையின் வெப்பநிலையை குறைக்கும் போது உருவாக சாத்தியமான விளைவுகள் யாவை?

v. $EO_2$ ஆனது $NaOH_{(aq)}$ உடன் காட்டும் தாக்கத்திற்கான சமப்படுத்திய இரசாயன சமன்பாட்டை தருக. இத்தாக்கத்தின் தாக்கவகையையும் குறிப்பிடுக.

(c) Fe, Ni கொண்ட கலப்புலோகத்தகடு ஒன்று அரிப்பை தடுப்பதற்காக Sn பூச்சு பூசப்பட்டுள்ளது. அத்தகைய கலப்புலோகத்தகட்டின் 20.00g மாதிரி மிகை ஐதான $H_2SO_4$ இல் முழுமையாக கரைக்கப்பட்டுள்ளது. விளைவு கரைசல் காய்ச்சிய நீர் சேர்த்து $500cm^3$ ஆக்கப்பட்டது. இதன் $25cm^3$ வேறாக்கப்பட்டு $0.05\ moldm^3$ செறிவுடைய $K_2Cr_2O_7$ உடன் முழுமையாக தாக்கம் அடைய செய்வதற்கு அதன் $40cm^3$ தேவைப்பட்டது. கரைசலின் பிறிதொரு $25cm^3$ வேறாக்கப்பட்டு மிகை NaOH உடன் வெப்பப்படுத்தி குளிர்வித்து பெறப்பட்ட வீழ்படிவு வடித்து அகற்றப்பட்டது. விளைவுக்கரைசலிற்கு மிகை $HgCl_2$ நீர்க்கரைசல் சேர்த்தபோது பெறப்பட்ட வீழ்படிவு வடித்து உலரவிடப்பட்டது. அதன் உலர்திணிவு 0.471g ஆகக்காணப்பட்டது.

i. மேற்படி பரிசோதனையில் சம்பந்தப்படும் அனைத்து தாக்கங்களுக்குமான சமப்படுத்திய சமன்பாடுகளை தருக.

ii. Fe இன் திணிவு சதவீதத்தை காண்க. (Fe- 56, Hg-200, Cl- 35.5)

09. (a) 1) மென்சவ்வு கலம் (Membrane cell) ஐ பயன்படுத்தி எரிசோடா உற்பத்தி தொடர்பான பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

i. இக்கைத்தொழிலின் மூலப்பொருள், பக்கவிளைபொருட்கள் என்பவற்றை தருக.

ii. அனோட், கதோட் இல் நடைபெறும் தாக்கங்களிற்கான சமப்படுத்திய இரசாயன சமன்பாடுகளை தருக.

iii. இக்கலத்தில் பயன்படுத்தப்படும் அனோட், கதோட்டை குறிப்பிடுக. அவற்றை தேர்ந்து எடுக்கும் போது என்ன காரணிகள் அவசியமானதாக எடுத்துகொள்ளப்படவேண்டும்?

iv. மென்சவ்வு பிரிசுவரின் தொழிற்பாடுகளை தருக.

v. சுண்ணாம்புக்கல், கற்கரி என்பவற்றையும் இக்கைத்தொழிலில் உருவாகும் பக்கவிளைபொருட்களையும் பயன்படுத்தி PVC தயாரிப்புக்கு எங்கனம் விரிவுப்படுத்தலாம் என்பதை சமப்படுத்திய தாக்கசமன்பாடுகளை மாத்திரம் பயன்படுத்தி காட்டுக.

2) யூரியா உற்பத்தி தொடர்பான கைத்தொழிலை கருத்திற்கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

i. இக்கைத்தொழிலிற்கான மூலப்பொருட்கள் யாவை? அவை எங்கனம் பெறப்படுகின்றது.

ii. இவ்வுற்பத்தியின் சம்பந்தப்படும் முக்கிய படிமுறைகள், தாக்கங்களை உரிய நிபந்தனைகளுடன் தருக.

iii. யூரியாவை வளமாக்கியாக பிரயோகிப்பதனால் ஏற்படும் நன்மைகள் 2 தருக.

பக். 13 ஐப் பார்க்க

(b) மனித செயற்பாட்டினாலும் இயற்கை நிகழ்வுகளினாலும் வளிமண்டலத்தில் விடுவிக்கப்படும் சில வாயு மூலக்கூறுகள் அமில மழைக்கு காரணமாக அமைகின்றன.

i. அமில மழைக்கு காரணமாக அமையும் வாயு மூலக்கூறுகள் எவை?

ii. இவ்வாயுக்கூறுகள் வளிமண்டலத்தை அடையும் வழிமுறைகள் நான்கை குறிப்பிடுக.

iii. அமில மழைக்கு பிரதான பங்களிப்பு செய்யும் வாயுக்கூறுகள் நீரில் கரைந்து எவ்வாறு அமில மழையை தோற்றுவிக்கின்றன என்பதை தகுந்த சமன்பாடுகளின் உதவியுடன் காட்டுக.

iv. அமிலமழையின் குறைந்தளவு அமிலநிலையிலும், அதிகளவு அமில நிலையிலும், டொலமைற்று பாறை எவ்வாறு கரையும் என்பதை தாக்க சமன்பாடுகளின் மூலம் காட்டுக.

v. அமில மழை காரணமாக சூழலில் ஏற்படும் பாதிப்புக்கள் 3 தருக.

vi. மேலே (i) இல் குறிப்பிட்ட வாயுக்கூறொன்று ஒளிஇரசாயனத்தாக்கத்தின் மூலம் மூலிகத்தை உருவாக்கி ஓசோன் படை சிதைவை எங்கனம் ஏற்படுத்துகின்றது என்பதை விளக்குக.

(c) பல்பகுதிய கைத்தொழிலுடன் சம்பந்தப்பட்ட சில இரசாயன பொருட்களின் பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது.

$CF_2 = CF_2$, HOOC  COOH, 2-methylbuta -1, 3-diene, HCHO,

 OH,  $CH = CH_2$, HO - $CH_2CH_2$ - OH

i. இவற்றில் வெப்பமிளக்கும் பல்பகுதியத்தை உருவாக்க கூடியவை யாவை?

ii. இவற்றில் ஒடுங்கல் பல்பகுதியத்தை உருவாக்க கூடியவை யாவை?

iii. மேலுள்ளவற்றில் ஒன்று ரெஜிபோம் உற்பத்தியில் பயன்படுத்தப்படுகிறது. அதனை குறிப்பிடுவதுடன் அதன் பல்பகுதியத்தின் மீள்வரும் அலகையும் குறிப்பிடுக.

iv. இயற்கை இறப்பர் ஆனது அதிக மீள்சக்தி உடையதாகும். இதற்கான காரணம் யாது?

v. மேற்குறிப்பிட்டவற்றில் இருந்து உருவாகும் பொலிஎசுத்தரின் மீள்வரும் அலகையும் பொலிஎசுத்தரின் பயன்பாடு ஒன்றையும் குறிப்பிடுக.

10. (a) 3d தாண்டல் மூலக உப்புக்கள் $X_1$, $Y_1$ என்பன ஒரே அன்னயன் பகுதியை கொண்ட இரு எளிய உப்புக்களாகும். இவை நீரில் கரைக்கப்பட்டு பெறப்பட்ட விளைவுக்கரைசலுடன் பின்வரும் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

$X_1$ ஐ கொண்ட நீர்க்கரைசலின் ஒருபகுதிக்கு KCN ஐ சேர்க்கும் போது மஞ்சள் சார் கபில வீழ்படிவு $X_2$ பெறப்பட்டது. இவ்வீழ்படிவுக்கு மிகை KCN ஐ சேர்த்த போது மஞ்சள் நிற கரைசல் $X_3$ பெறப்பட்டது. $X_1$ ஐ கொண்ட நீர்க்கரைசலின் பிறிதொருபகுதிக்கு $H_2O_2$, ஐதான HCl சேர்த்து வெப்பப்படுத்தி பின் குளிர்வித்து கரைசல் $X_4$ பெறப்பட்டது. இவ்விளைவுக்கரைசலிற்கு $X_3$ ஐ சேர்த்த போது நீல வீழ்படிவு $X_5$ பெறப்பட்டது. $Y_1$ ஐ கொண்டுள்ள நீர்க்கரைசலின் ஒருபகுதிக்கு $BaCl_2$ / dil.$HNO_3$ சேர்க்க வெண்வீழ்படிவு Z பெறப்பட்டது. $Y_1$ ஐ கொண்டுள்ள நீர்க்கரைசல் மாதிரிகளிற்கு கரைசல் $X_3$, KI, மிகை செறிந்த HCl என்பன தனித்தனியே சேர்த்த போது முறையே கபில வீழ்படிவு $Y_2$, வெண்வீழ்படிவு $Y_3$, மஞ்சள் கரைசல் $Y_4$ என்பன பெறப்பட்டன.

i. உப்புக்கள் $X_1$, $Y_1$ ஐ இனங்காண்க.

ii. மேற்கூறிய சோதனையில் உருவாகிய இரசாயன இனங்கள் $X_2$, $X_3$, $X_4$, $X_5$, $Y_2$, $Y_3$, $Y_4$, Z என்பவற்றை இனங்காண்க.

iii. $X_3$, $Y_4$ என்பவற்றின் மஞ்சள் நிறத்திற்கு பொறுப்பான அயன் இனங்களின் IUPAC பெயர்களை தருக.

iv. மேற்கூறிய பரிசோதனையில் பின்வரும் இனங்கள் உருவாவதற்கான சமப்படுத்திய இரசாயன சமன்பாடுகளை தருக.

(a) $X_4$ (b) $Y_2$ (c) $Y_3$

v. உப்புகள் $X_1$, $Y_1$ என்பவற்றை மாத்திரம் கொண்ட நீர்க்கரைசல் உம்மிடம் தரப்படுமிடத்து கூட்டப்பகுப்பாய்வில் உமக்குள்ள அறிவை பயன்படுத்தி இவ்வுப்புக்களின் செறிவை துணிவதற்கான திட்டமொன்றை தெளிவாக குறிப்பிடுக.

பக். 14 ஐப் பார்க்க.

(b) A, B ஆகிய வாயுமூலக்கூறுகளிடையே நடைபெறும் தாக்கமொன்று கீழே தரப்பட்டுள்ளது.

$$3A_{(g)} + B_{(g)} \rightarrow C_{(g)} + D_{(g)}$$

விளைவு C உருவாகும் வீதம், தாக்கிகளின் ஆரம்பச் செறிவுகள் என்பன கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளன. இத்தாக்கம் தொடர்பாக அறியப்பட்ட பொறிநுட்பம் கீழே தரப்படுகிறது.

படி I  (A) + (A) $\xrightarrow{\text{மெதுவானது}}$ (C) + (E)

படி II  (E) + (A) + (B) $\xrightarrow{\text{விரைவானது}}$ (D)

இத்தாக்கத்திற்கான வீதக்கோவை $R = k[A_{(g)}]^x[B_{(g)}]^y$

$25^0C$ இல் நிகழ்த்தப்பட்ட இத்தாக்கத்தின் மூலம் பெறப்பட்ட சில அடிப்படைத் தரவுகள் கீழே தரப்பட்டுள்ளன.

| பரிசோதனை | [A] இன் ஆரம்பச் செறிவு ($moldm^{-3}$) | [B] இன் ஆரம்பச் செறிவு ($moldm^{-3}$) | ஆரம்ப தாக்க வீதம் ($moldm^{-3}s^{-1}$) |
|---|---|---|---|
| 1. | $4.2 \times 10^{-4}$ | $2.8 \times 10^{-3}$ | $3.2 \times 10^{-4}$ |
| 2. | $2.1 \times 10^{-4}$ | $2.8 \times 10^{-3}$ | R |
| 3. | C | $5.6 \times 10^{-3}$ | $1.28 \times 10^{-3}$ |

i. X, Y இன் பெறுமதிகளைத் தருக.

ii. பரிசோதனை 2 இல் தாக்கவீதம் R இன் பெறுமதியைக் காண்க.

iii. பரிசோதனை 3 இல் A இன் செறிவு C ஐக் காண்க.

iv. தரப்பட்ட வெப்பநிலையில் தாக்கவீத மாறிலி k ஐயும் அதன் அலகையும் தருக.

v. மேற்படி பரிசோதனையில் k இன் பெறுமதியை மாற்றுவதற்கு எந்நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.